International Journal for Multidisciplinary Research (IJFMR)

E-ISSN: 2582-2160 ● Website: www.ijfmr.com ● Email: editor@ijfmr.com

# பழனி முருகன் கோயில்களில் நாதஸ்வர இசைமரபு

**ச. பாலசந்தர்**

முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்), இசைத்துறை அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்

**முன்னுரை**

மனிதனின் பண்பாடும், நாகரிகமும் வளர்ச்சி பெறும் இடங்களில் இறைவழிபாடுகளும், திருவிழாக்களும் சிறந்து விளங்கும். திருவிழாவை கூட்டுச் சடங்கிலிருந்து தோன்றியது என்றும், இவை பண்பாட்டின் படி மலர்ச்சி காரணமாகவும், சமூகப் பொருளாதார மாற்றங்களின் காரணமாகவும் இக்கூட்டுச் சடங்குகள் பெரிய திருவிழாக்களாக மாற்றம் பெற்றுக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

பழநி முருகன் கோயில் விழாக்கள் இடையறாது நடந்து கொண்டிருக்கும். மக்கள், திராளாகக் கூடித் தமக்குள் ஓர் உறவை ஏற்படுத்திக் கொள்வதற்கு இக்கோயில் விழாக்கள் பெரிதும் துணை செய்கின்றன.

**விழாக்களின் சிறப்புகள்**

பழநி முருன் கோயிலிலும் அதன் சார்புக் கோயில்களிலும் நடைபெறும் விழாக்கள் முழுமதி நாட்களில் தமிழ் மாதங்களில் வரும் நட்சத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு கொண்டாடப்படுகின்றன. முழுமதி நாட்களிலும், நல்ல நாளிலும், வளர்பிறை காலங்களிலும் பழந்தமிழர்கள் விழாக்களைக் கொண்டாடினார்கள் என்பதை சங்க இலக்கியங்கள் மூலம் அறியமுடிகின்றது.

‘கார்த்திகைத் திருவிழா’ முழு மதி நாளில் தொடங்கியதனை ‘அகநானூற்றப் பாடல்’ குறிப்பிடுகின்றது. தெருக்களிலும், வீடுகளிலும் ஒளி விளக்குகளால் அழகுப்படுத்தப்பட்டுள்ளதை பற்றி அப்பாடல் குறிப்பிடுகின்றது.

“சங்க காலத்தில் இறைவனுக்கும், இறைவிக்கும் திருமண விழா கொண்டாடியதைப் பரிபாடல் மூலம் அறியமுடிகின்றது”

‘பாண்டிய வரலாறு’ என்ற நூலில், “பாண்டியர் காலத்தில் சிவாலயங்களிலும், விண்ணகரங்களிலும் திங்கள் தோறும் முழுமதி நாட்களில் திருவிழாக்கள் நடைபெற்று வந்தன. அரசர்களும், தலைவர்களும் தாம் பிறந்த நாட்களில் விழாக்கள் நடத்துவதற்கு இறையிலி நிலங்களும், பொருளும் அளித்துள்ளனர்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சோழர் காலத்தில், “தைப்பூசம், மகரசங்கராந்தி, சிவராத்திரி, கார்த்திகை திருவிழா” போன்ற திருவிழாக்கள் கொண்டாடினர் என்று கு. சேதுராமன் என்ற நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

விழாக்களை பொதுவாகப் பெருவிழா என்றும், சிறுவிழா என்றும் பாகுபாடு செய்யலாம். இவ்வாறு பாகுபாடு செய்வதற்கு அடிப்படையாக இருப்பது பெருவாரியான மக்கள் பங்கேற்பே ஆகும்.

பழநி கோயிலை பொருத்த அளவில் தைப்பூசம், பங்குனி உத்திரம், மாரியம்மன் திருவிழா ஆகிய மூன்றும் ஏனைய விழாக்களிலும் பெரு விழாக்களாகக் கருதப்படுகின்றன.

**சார்புக் கோயில்களின் விழாக்கள்**

பழநி மலை மேலிருக்கும் முருகன் கோயிலிலும், அதன் சார்புடைய அருள்மிகு பெரியநாயகி அம்மன் திருக்கோயிலிலும், அருள்மிகு திரு ஆவினன்குடி திருக்கோயிலிலும் நடைபெறும் விழாக்கள் அனைத்துமே பழநி முருகன் கோயில் விழாக்களாகவே கருதப்படுகின்றன. இக்கோயில்கள் அனைத்துமே முருகனை மையமாக கொண்டு அமைந்துள்ள ஒரே அமைப்பு ஆகும். எனவே விழாக்களும் அத்தகையனவே ஆகும்.

சார்புடைக் கோயில்களில் விழாக்கள் நிறைவு பெறும் பொழுது அக்கோயிலின் யாகசாலையில் வைக்கப்பட்டுள்ள தீர்த்தக்குடத்தை எடுத்துக் கொண்டு மலைக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் பழநியாண்டவருக்கு அர்த்தஜாம பூஜையின் போது அபிஷேகம் செய்வர். இது சார்புடைக் கோவிலில் விழா நடைபெற்றாலும் பழநி மலைக் கோயில் முருகனுக்கே விழா நடைபெறுகின்றது என்பதையே காட்டுகின்றது.

**கோயில் திருவிழாக்களில் நாதஸ்வர இசை**

பழநியில் உள்ள ஏழு திருக்கோயில்களில் நடைபெறுகின்ற திருவிழாக்களில் நாதஸ்வர இசையின் பங்கு மிக முக்கியமானதாக கருதப்படுகின்றது.

திருக்கோயில்களில் எவ்வாறு இறைவனின் நித்திய பூசா காலங்களில் நாதஸ்வர இசை மிகவும் சிறப்பாக முழங்குகின்றனவோ அவ்வாறே 'இறைவனின் திருவீதியுலா' நிகழ்ச்சிகளிலும் நாதஸ்வர இசை மிகவும் சிறப்பாக முழங்க வேண்டும் என்பது முன்னோர்களின் விருப்பமாகும். அவர்கள் இசை வழிபாடில்லாத இறை வழிபாட்டை உயிரில்லாத உடலாகவே கருதி வந்துள்ளனர். பன்னெடுங் காலமாக இசை மரபுகளைப் போற்றி, பாதுகாத்து, வளர்த்து வந்துள்ளனர். அதனால்தான் வேறு எந்த இசை நிகழ்ச்சிகளிலும் காணமுடியாத 'மல்லாரி, ரத்தி, எச்சரிக்கை' போன்ற இசை வகைகளை நாதஸ்வர இசை நிகழ்ச்சிகளில் மட்டுமே கேட்க முடிகின்றது. இத்தகைய இசை வகைகள் இறைவனின் திருவீதி உலா நிகழ்ச்சிகளில் மட்டுமே வாசிக்கப்படுகின்றன என்பது மிகவும் குறிப்பிடத்தகுந்ததாகும்.

இறைவனின் திருவீதி உலா நிகழ்ச்சியைத் திருவிழாவாகக் கொண்டாடி மக்கள் மகிழ்ச்சிக் கடலில் திளைப்பார்கள். இவ்வாறு இறைவன் தன் இருப்பிடத்தை விட்டு புறப்பட்டு ஆலயத்தின் திருச்சுற்றின் உள்ளேயே அல்லது திருவீதிகளிலேயோ எழுந்தருளும்போது 'நாதஸ்வர இசை' மிகவும் சிறப்பாக வாசிக்கப்படுகின்றது.

இறைவனின் திருவீதியுலா புறப்பாட்டின் போது நாதஸ்வரத்தில் கம்பீர நாட்டை இராகம் வாசிப்பதற்கு முன்பாக, முதலில் தவிலில் அலாரிப்பு வாசிக்கப்படும். இது கண்டநடையில் அமைந்த சொற்கோர்வையாக இருக்கும். இதனைத் தொடர்ந்து நாதஸ்வரத்தில் கம்பீர நாட்டை இராகம் வாசிக்கப்படும். வீரரசம் பொருந்திய ராகமாக கம்பீரநாட்டை ராகம் விளங்குகின்றது. இராக ஆலாபனைக்கு பிறகு இதில் மல்லாரி எனும் இசை வகை வாசிக்கப்பட்டுள்ளது. இது சாகித்தியமில்லாத தத்தகாரமாக அமைந்திருக்கும்.

இத்தகைய மல்லாரியை வாசித்த உடனேயே வெகு தூரத்தில் இருப்பவர்கள்கூட கோயிலில் சுவாமி புறப்பாடு நடைபெகிறது என்பதை அறிந்து கூட்டமாக வந்து வழிபாடு செய்வதுண்டு. மல்லாரி மடிந்தவுடன் கீர்த்தனைகள், காவடிசிந்து, கிளிக்கண்ணி போன்ற இசை வகைகள் நாதஸ்வரத்தில் இசைக்கப்படுகின்றது. திருவீதியுலா முடிந்து சுவாமி கோயிலுக்கு உள்ளே நுழையும் போது கோபுர வாசலில் வைத்து தீபாரதனை நடைபெறும். இங்கு இறைவனுக்குக் கண்ணேறு கழிக்கப்படும். அந்நேரத்தில் நாதஸ்வர இசைக் குழுவினர் சுவாமியை மூன்று முறை

வலம் வருவார்கள். இவ்வாறு சுற்றி வருகையில் தாளத்தோடு தவிலை மட்டும் வாசித்துக்கொண்டு வருவார்கள். ஒவ்வொரு சுற்றும் முடிந்து சிறிது நேரம் நிற்கும் போது மட்டும் நாதஸ்வரம் இசைக்கப்படும். இவ்வழிபாட்டில் தவிலை மட்டும் தட்டிக்கொண்டு சுற்றி வருவதால் இதற்கு தட்டிச்சுற்று என்று அழைக்கப்படுகின்றது. வைணவக் கோயில்களில் இதனைத் திருவந்தி காப்பு என்று அழைக்கப்படுகிறது.

தொடர்ந்து சுவாமி கோயிலின் உள்ளேயோ அல்லது தன் இருப்பிடத்திற்கோ எழுந்தருளும் போது 'எச்சரிக்கை' என்னும் இசைவகை வாசிக்கப்படுகின்றது. இதனைப் படியேற்றம் என்றும் அழைப்பர். இப்பாடல் சௌராஷ்டிரம் ராகத்தில் வாசிக்கப்படுகின்றது.

பழநியில் உள்ள திருக்கோயில்களில் திருவிழாக்கள் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன. இத்திருவிழாக்களில் 'நாதஸ்வர இசை' மிக முக்கிய பங்காற்றுகின்றன. இத்திருவிழாக்களில் நாதஸ்வரத்தில் இசைப்பதற்குகென்று தனித்தனியான இசைமரபுகள் உருவாக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருவதை நாம் அறியமுடிகின்றது.

பழநி திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களில் நாதஸ்வரத்தில் இசைக்கப்படும் மல்லாரி, காவடிச்சிந்து, கிளிக்கண்ணி, அம்மன்கொட்டு. கீர்த்தணைகள், தேவாரம், திருவாசகம், திருப்புகழ் போன்ற பல்வேறு இசை உருப்படிகள் வாசிக்கப்பெற்று சிறப்பிக்கப்படுகின்றது.

**நிறைவுரை**

கோயில்களோடு தொடர்புடைய விழாக்கள் சமய சார்பு உடையனவாகவும், பரந்த அளவில் சமூக நிகழ்வுகளாகவும் அமைவதை அறியமுடிகிறது. ஒவ்வொரு விழாக்களிலும் நாதஸ்வரம், தவில் இசை மிக முக்கிய பங்காற்றுவதைக் காணமுடிகிறது.

**துணைநூல் பட்டியல்**

1. இரத்தின. கிருட்டிணமூர்த்தி, பழநி தல வரலாறு, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் வெளியீடு, பழனி, 1999.
2. பெ. சுப்பிரமணியன், பழனி முருகன் கோயில் வழிபாடும், திருவிழாக்களும், ராம்குமார் பதிப்பகம், பழனி, 2004.
3. கே.ஏ. பக்ரிசாமிபாரதி, திருக்கோயில் நுண்கலைகள், குசேலர் பதிப்பகம், சென்னை, 2004.